பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 15 திங்கட்கிழமை 02.10.2023 கதிர் 325

# பாடசாலை இடைவிலகல் அதிகரிப்பு

## பிரதமர் தினேஷ் சுட்டிக்காட்டு

பாடசாலையை விட்டு இடைவிலகும் மாணவர்களின் தொகை அதிகரித்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் சர்வதேச சிறுவர் தினத்தினை முன்னிட்டு நேற்றையதினம் மகளீர் மற்றும் சிறுவர் அமைச்சின் ஏற்பாட்டில் நிகழ்வுகள் நடைபெற்றன. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முடிவுகளை எடுப்பதற்கான திறன் எம்மிடத்தல் இருக்கின்றபோது நாம் முடிவுகளை எடுப்பதில்லை. அதிகாரம் இருக்கும்போதும் நாம் முடிவுகளை எடுப்பதில்லை. இந்தப் பின்னடைவான விடயங்களில் இருந்து நாம் மீண்டு வரவேண்டியுள்ளது.

நாட்டில் நாற்பது இலட்சம் சிறுவர்கள் உள்ளார்கள். அவர்களின் எதிர்காலத்தினை நாம் இடைநடுவில் நிறுத்திவிடக்கூடாது. இலட்சக்கணக்கானசிறுவர்கள்தமதுபாடசாலைக் கல்வியை தொடரமுடியதுள்ளார்கள். இந்த விடயம் பற்றிய அமைச்சர் ☞2

## இனிது ரகசியம் அல்ல!

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் 2016ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்ற நிதி ஒதுக்கீட்டில் இருந்து 2017ஆம்ஆண்டுநல்லூரில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவுத தூபிக்கு பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டது. இந்த விடயத்தில்தற்போதுநல்லூர்பிரதேச செயலாளரின் தலையை பந்தாட உள்நாட்டு அலுவல்கள் அமைச்சும் பொலிஸாரும் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

இதற்குயாழ்ப்பாணம்பொலிசாரின் வேண்டுகோளின் பெயரில் பொலிஸ்மாஅதிபர்சட்டமாஅதிபருக்கு எழுதிய கடிதமே அடிப்படையாக அமைந்தது. இது பற்றி நான் ஏற்கனவே உங்களுக்கு அறியத் தந்திருக்கின்றேன்.

பயங்கரவாத அமைப் ☞2

# வாழ்த்து

மாலைதீவின் புதிய ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டிருக்கும் மொஹமட் முயிசூவுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தொலைபேசி அழைப்பின் ஊடாகவே மொஹமட் முயிசூவுக்கு, ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க தனது வாழ்த்துகளைக் கூறியுள்ளார்.

இலங்கை - மாலைதீவு மக்களின் மேம்பாட்டிற்காக, இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் இருதரப்பு உறவுகளை பலதரப்பு கூட்டுச் செயன்முறைகளாக ☞2

# நிகழ்நிலைக் காப்பு சட்டம் நிறைவேறினால் மாற்றுக் கருத்து கொண்டவர்களை ஒடுக்கும்

## சுதந்திர ஊடக இயக்கம் வலியுறுத்து

வர்த்தமானியாக வெளியிடப்பட்டுள்ள நிகழ்நிலைக் காப்பு தொடர்பான புதிய சட்டமூலவரைவானது பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தை பறிக்கவும் மாற்றுக் கருத்து கொண்டவர்களை ஒடுக்கவும் பயன்படும் அபாயம் காணப்படுவதாகச் சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இலங்கையில் இதுவரை சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை சட்டம் மோசமான முறையில் பயன்படுத்தப்படும் பின்னணியில் இந்த உத்தேச சட்டமூலம்அமுல்படுத்தப்படுமாயின் சமூகத்திற்கு கேடுவிளைவிக்கும் வகையில் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு மிகவும் அதிகமுள்ளதாகவும் அவ்வியக்கம் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து சுதந்திர ஊடக இயக்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்மேலும்தெரிவித்துள்ளதாவது:

இணைவழி தளங்களில் பயனர்களை அல்லது பிறரைத் ☞2

# நீதிபதிக்கு அச்சுறுத்தல்; எதிர்த்து அனைவரும் அணி திரள்வோம்

## முன்னாள் எம்பி. சுரேஷ் அறைகூவல்

அண்மையில்உயிர் அச்சுறுத்தல்காரணமாக நீதிபதியேநாட்டைவிட்டே வெளியேறும்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள சம்பவத்திற்கு குறிப்பாக தமிழர்களின் மரபுரிமையைக்காப்பதற்காக வழங்கப்பட்டநீதிமன்றக் கட்டளையை மாற்றியமைக்குமாறு விடுக்கப்பட்ட அழுத்தங்களையும் உயிரச்சுறுத்தலையும் தமிழ் மக்களாகியநாம்அனைவரும் ஒன்றுதிரண்டு எதிர்க்க வேண்டும் என்று ஜனநாயகதமிழ்தேசிய கூட்டணியின் சார்பில் அதன்பேச்சாளர்சுரேஷ் க. பிரேமச்சந்திரன் அறைகூவல் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழு விபரம் வருமாறு:

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி திரு.ரி. சரவணராஜா ☞2

# விலைகளை அதிகரித்தது சினோபெக் நிறுவனம்

சினோபெக் லங்கா நிறுவனம்நேற்றுமாலை ஆறு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலையை அதிகரித்துள்ளது.

அதன்படி, பெற்றோல் ஒக்ரேன் 92இன் விலையில் எவ்விதமான மாற்றமும் செய்யப்படவில்லை. அதன் லீற்றர் ஒன்றின் விலையாது 358ஆக பேணப்படுகின்றது.

பெற்றோல் ஒக்ரேன் 95, லீற்றர் ஒன்று ஆறு ரூபாவினால் ☞2

# ஜனாதிபதித் தேர்தலுக்கு ரூ. 11 மில்லியன் ஒதுக்கீடு

## அடுத்த வருட பட்ஜெட்டில்

ஜனாதிபதி தேர்தலுக்காக அடுத்த ஆண்டுக்கான வரவு, செலவு ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் 11 பில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்ய ஆட்சியாளர்கள் உத்தேசித்துள்ளனர்.

இதேநேரம், 2024ஆம் ஆண்டி ஒதுக்கீட்டுசட்டமூலத்தின் பிரகாரம் அரசின் செலவினம்3,860பில்லியன் ரூபாவாகும். இது 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 203 பில்லியன் ரூபா அதிகரிப்பாகும். 2023இல்மதிப்பிடப்பட்ட செலவு 3,657 ☞2

# நீதி – சட்டவாக்கம் – நிறைவேற்று துறைகள் இடையிலான சமநிலை திடீரெனக் குலைவு

## சுதந்திரக் கட்சி உப தலைவர் சுட்டிக்காட்டு

நீதித்துறை, சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை ஆகியவற்றுக்கிடையிலானசமநிலையானது குழம்பியுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர்பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாசதெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களிடத்தில்கருத்து வெளியிடும்போதே அவா மேற்கண்டவாற தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றமே உயரிய சபையாகும். நாடாளுமன்றமே சட்டமியற்றும் இடமாகும். அதுவே அனைத்து கட்டமைப்புக்களையும் விடவும் உயர்ந்ததாகும் என்பது தாற் ☞2 போதைய ஜனா

# நள்ளிரவில் எரிபொருள் விலைகள் அதிகரிப்பு

சினோபெக் தனது எரிபொருள்விலைகளை அதிகரித்து அறிவித்த சிறிது நேரத்திலேயே, இலங்கைபெற்றோலியக் கூட்டுத்தாபனமும் (ஸீஊணஸீ) எரிபொருள் விலையை அதிகரித்துள்ளது, இது நள்ளிரவு முதல் இந்த விலை அதிகரிப்புநடைமுறைக்கு வரந்துள்ளது.

புதிய விலை திருத் தத்தின் கீழ், லங்கா பெற்றோல் 92 ஒக்டேன் பெற்றோல் விலை ரூபாய் 4ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய விலை ரூ. 365 ஆக அதிகரித்துள்ளது. லிட்டருக்கு ரூ. லங்கா பெற்றோல் 95 ☞2

# 2 விமான சேவைகள் நேற்றும் இரத்து உடனடி விசாரணை நடத்த உத்தரவு

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ்நிறுவனத்தின் இரண்டு விமான சேவைகள் நேற்று இரத்துச் செய்யப்பட்டமையால் பயணிகள் சிரமத்திற்குள்ளாகியுள்ளதாக விசனம் வெளியிட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கன் விமான சேவைகளுக்குச்சொந்தமான விமானங்கள் தொடர்ச்சியாக தாமதமாகி வருகின்றமை தொடர்பில் விரிவான விசாரணைகள்முன்னெடுக்கப்பட வுள்ளதாக துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் ☞2

## நீதிபதி விவகாரம் பற்றி விசாரிக்க முன்

# முதலில் ரணிலை விசாரிக்கவேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

நீதிபதி சரவணராஜாவின் வெளியேற்றம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு முன்னதாக உயர் நீதிமன்ற நீதிபதிகளை நாடாளுமன்றத்திற்கு அழைத்து விசாரணைகள் செய்யவதற்கு காரணமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விசாரணைக்கு உட்படுத்தவேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளர் முஜிபுர் ரஹ்மான் வலியுத்தியுள்ளார். ☞8

# நீதிபதி ஒருவர் பகிரங்கமாக அறிவித்துவிட்டு வெளியேறிய சம்பவம் இதுவே முதல் தடவை

## நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவிப்பு

(ந.லோகதயாளன்.)

நீதிபதிகள் அழுத்தங்கள் காரணமாக பதவிகளை விட்டு நாட்டைவிட்டு வெளியேறிய தருணங்கள் கடந்த காலங்களிலும் நிகழ்ந்தாலும் இம்முறைதான் ஒருவர் அதனை பகிரங்கமாக தெரிவித்து வெளியேறியுள்ளார்எனதமிழ்அரசுக் கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு முள்ளியவளையில் நேற்று நடைபெற்ற மக்களுக்கான குடிதண்ணீர் திட்டத்தைக் கையளிக்கும்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இங்குநாடாளுமன்ற உறுப்பினர் மேலும் கருத்துதெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு அழுத்தங்கள் ☞8

# தம்பலகாமம் வைத்தியசாலையில் நடந்த தீ விபத்து குறித்து முழு விசாரணை தேவை

## சம்பந்தன் எம்.பி. வலியுறுத்து

தம்பலகாமம் வைத்தியசாலையில் ஏற்பட்ட தீ விபத்து சம்பந்தமாக முழுமையான விசாரணை தேவையொன்று இலங்கை தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவரும், திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில்அவர் மேலும்தெரிவித்ததாவது:

திருகோணமலை - தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையானது பொதுமக்களுக்கான சுகாதார சேவைகளை வழங்குவதில் முக்கியமான வகிபாகத்தினை வழங்கி வருகின்றது.

இந்த பிரேதச வைத்தியசாலையானது பலத்த சவால்களுக்கு மத்தியில் மீளமைக்கப்பட்டு படிப்படியாக தனது சேவைகளைமேம்படத்தி ☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

புடன் தொடர்புபட்ட ஒருவரின் நினைவாக நிதி ஒதுக்கப்பட்டதை நல்லூர் பிரதேச செயலர் தடுத்திருக்கவேண்டும், அது அந்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படுவதற்கு அவர் அனுமதித்திருக்கக்கூடாது என்பதே இப்போது அவருக்கு எதிராகக் கொண்டுவரப்படும் குற்றச்சாட்டு.

வேடிக்கை என்னவென்றால், தியாகி திலீபனின் நினைவுத் தூபியைச் சுற்றி இரும்புக் கம்பி வேலி அமைக்க நிதி கிடைத்த விடயத்தை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் பகிரங்கமாக சமர்ப்பித்து அதற்குரிய அனுமதியை பிரதேச செயலாளர் கேட்டுள்ளார். அந்தச் செலவிற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிலிருந்த அனைவரும் அப்போது அனுமதி வழங்கியிருந்தனர். எவர் ஒருவரும் எதிர்ப்புத் தெரிவித்ததாக கூட்ட அறிக்கையில் பதியப்பட்டிருக்கவில்லை.

அதே கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட எஸ்.எஸ்.பியும் இருந்துள்ளார். அவரும் கூட இதற்கு எந்த எதிர்ப்பும் தெரிவித்திருக்கவில்லை. அதாவது 2017 ஜனவரி 19 இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயத்திற்கான ஒப்புதல் வழங்கும்போதே சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரும் அந்தக் கூட்டத்தில் இருந்துள்ளார். இக் கூட்டத்திற்கான வருகைப் பதிவேட்டிலும் அவர் ஒப்பமிட்டுள்ளார்.

அவ்வாறானால் பிரதேச செயலாளரினைவிடவும் அதிக தவறு இழைத்தவராக இந்தப் பொலிஸ் அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் பொலிஸாரோ அதைச் செய்யாமல் பிரதேச செயலரை மாட்டிவிடுவதற்கு வழிப பார்க்கிறார்கள்.

இந்த விடயத்தில் பொலிசார் தடியை கொடுத்து அடி வாங்குகின்றனரோ என்ற எண்ணத் தோன்றுகின்றது.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## பாடசாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்னுடன் தற்போதும் கலந்துரையாடினார்.

நாங்கள் பரீட்சைகளில் வெற்றி பெற்றவர்களையும், தோல்வி அடைந்தவர்கள் பற்றியும் தான் உரையாடுகின்றோம். கவனத்தைச் செலுத்து கின்றோம். ஆனால் பாடசாலை மாணவர்களின் இடைவிலகல் சம்பந்தமாக யாரும் கவனத்தில் கொள்வதில்லை.

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில்லியன் ரூபாவாகும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராஜினாமா செய்த நிலையில் ஜனாதிபதியின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு செப்டெம்பர் மாதத்துடன் நிறைவடையவுள்ள நிலையில் குறித்த காலப்பகுதியில் அரசியலமைப்பின் பிரகாரம் தேர்தல் நடத்தப்படுமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## விலைகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரித்துள்ளது. அதன்படி புதிய விலையானது 414 ரூபாவிலிருந்து 420 ரூபாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஒட்டோ டீசலின் விலையை 10 ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளதோடு 338 ரூபாவிலிருந்த அதன் விலை தற்போது 348 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 61 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு 356 ரூபாவிலிருந்து அதன் விலையானது 417 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## நிகழ்நிலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுறுத்தலுக்கு உட்படுத்தும், புரளி மற்றும் பொய்செய்தி பரவல் (பிற பிரிவுகள் உட்பட) வெறுக்கத் தக்க பேச்சு போன்றவற்றை கட்டுப்படுத்த ஒரு பொறிமுறை காணப்பட வேண்டிய அவசியம் காணப்படும் அதேவேளை சமூக தரநிலை மற்றும் பல துறைசார் பங்கேற்பின்றி டிஜிட்டல் ஊடக கல்வியறிவை மேம்படுத்தல், நெறிமுறை பயன்பாட்டை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை கருத்தில் கொள்ளாமல் சுயாதீனத்துவம் தொடர்பான சந்தேகத்திற்கிடமான ஆணைக்குழு நியமிப்பதன் ஊடாகச் சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் எதிராளிகளை ஒடுக்கவும் அதிகாரத்தில் உள்ள அரசாங்கத்திற்கு எதிராக இணையத் தளங்களில் குரல்கொடுப்பதை தடுக்கவும் இடமளிக்கும் புதிய பாதையொன்றை அரசாங்கம் தேர்வு செய்துள்ளது.

அவ்வாறான சட்டமூலம் நிறைவேற்றப்படுமாயின் தற்போதைய அரசாங்கமோ அல்லது அதிகாரத்திற்குவரும் எதிர்கால அரசாங்கமோ அதனைத் தவறாகப் பயன்படுத்தாதென உறுதியளிக்க முடியாது. உத்தேச சட்ட விதிகளின்படி ஜனாதிபதியால் ஆணைக்குழு நியமிக்கப்படுமாயின் அதனைச் சுயாதீன ஆணைக்குழு என அழைப்பது நியாயமானதா எனச் சுதந்திர ஊடக இயக்கம் கேள்வி எழுப்புகின்றது.

மேலும் இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்களுக்குப் பரந்த விளக்கங்கள் கொடுக்கப்படலாம் என்பதால் ஏதாவது ஒரு விடயம் தொடர்பில் அது தவறான விடயம் என வரைவிலக்கணம் அளித்து குறித்த மாற்றுக்கருத்தை முடக்க ஆணைக்குழுவிற்கு அதிகாரம் காணப்படும் காரணத்தால் சம்பந்தப்பட்ட தரப்பினரின் கருத்துச் சுதந்திரம் சவாலுக்கு உட்படுத்தப்படும்.

உத்தேச சட்டமூலத்தின்படி சமூக ஊடக வசதிகளை வழங்கும் இணையத் தளங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் மற்றும் பதிவு செய்யப்படாத சமூக ஊடக தளங்களை இந்நாட்டு மக்கள் இழக்கும் அபாயம் காணப்படுகின்றது.

இத்தகைய பின்னணியில் துஷ்பிரயோகத்திற்கு அதிக சாத்தியமுள்ள அடக்குமுறைச் சட்டமூலத்தை அறிமுகப்படுத்துவதற்குப் பதிலாக சமூக ஊடகங்களின் பயன்பாடு தொடர்பான தரநிர்ணயம் மற்றும் நெறிமுறைகளை ஊக்குவித்தல் குடிமக்களின் டிஜிட்டல் கல்வியறிவை மேம்படுத்தல் உட்பட தற்போது காணப்படும் சட்ட கட்டமைப்பை வினைத்திறனாகப் பயன்படுத்துதல் போன்ற மாற்று தேர்வை ஏன் அரசாங்கம் குறிப்பிடவில்லை என்பது தொடர்பாகச் சுதந்திர ஊடகம் இயக்கம் அரசிடம் கேள்வி எழுப்புகின்றது.

இந்த சட்டமூலத்தை திரும்பப் பெறுவதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் கருத்துகளை நசுக்குவதற்குப் பதிலாக நாகரீகமான முறையில் பதிலளிக்கும் மற்றும் பேச்சு சுதந்திரத்தை மதிக்கும் சமூகத்தை கட்டியெழுப்புவதில் நம்பிக்கை கொண்ட அனைத்து தரப்பினரும் புரிந்துணர்வுடன் செயல்பட வேண்டும் என்றுள்ளது.

## 2 விமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்ப கோளாறு காரணமாக நேபாளத்தின் காத்மாண்டு மற்றும் இந்தியாவின் மும்பைக்கு புறப்படவிருந்த இரண்டு விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலை 8.20 மணியளவில் 200 பயணிகளுடன் நேபாளத்தின் காத்மண்டு நோக்கிப் புறப்படவிருந்த ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸிற்குச் சொந்தமான யு.எல்.181 என்ற விமானம் பல மணி நேரம் தாமதமாகியிருந்த நிலையில், பின்னர் விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இரத்து செய்யப்பட்ட மற்றைய விமானம் நேற்றுக் காலை மும்பைக்கு புறப்பட விருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டதன் காரணமாக பயணிகளை ஹோட்டல்களுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கன் விமான சேவை குறிப்பிட்டுள்ளபோதும், சில பயணிகள் தங்களின் பணிகள் நிமித்தம் அவசரமாக நேபாளம் மற்றும் மும்பைக்கு செல்லவிருந்த நிலையில் குழப்பநிலைமைகள் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதேநேரம், நேபாளத்துக்கு புறப்படவிருந்த விமானத்தில் இராஜாங்க அமைச்சர் சிசிரஜயக்கொடியும் பிரசன்னமாகியிருந்ததோடு, குறித்த இடையூறு சம்பந்தமாக விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் உடன் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் தொழில்நுட்ப அதிகாரிகளின் தொழிற்சங்க நடவடிக்கைகளால் தான் இவ்விதமான நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், இன்றையதினம் காலை 9.30 மணிக்கு அமைச்சில் விசேட கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாகவும் அதன்போது தாமதம் குறித்த விடயம் முக்கியமாக கவனத்தில் கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தொழிற்சங்க நடவடிக்கைகளை பேணும் தொழிற்சங்கங்கள் தொடர்பிலும் கரிசனை கொண்டுள்ளதாகவும் அவர்களுடனும் பேச்சுக்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னரே இறுதியான தீர்மானங்கள் அறிவிக்கப்படும் என்றும் பயணிகளுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்காக வருந்துவதாகவும் கூறியுள்ளார்.

## நீதிபதிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் அச்சுறுத்தப்பட்டு, அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு நாட்டைவிட்டு வெளியேறும் அளவுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார். முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர்மலை பிரதேசத்தை சிங்களமயப்படுத்துவதற்கு புத்தபிக்குகள் எடுத்த முயற்சியை சட்டத்தின் அடிப்படையில் நின்று அதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்தது அவருக்கு மேல் புத்தபிக்குகள் சினம்கொள்வதற்குக் காரணமாக அமைந்தது.

குறைந்தபட்சம் நீதிமன்றங்களினூடு தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய நீதிஇ நியாயத்திற்குக்கூட இவ்வாறான நடவடிக்கைகள் ஊடாக வேட்டு வைக்கப்பட்டுள்ளது. இலங்கையின் நீதித்துறையைக் களங்கப்படுத்துவது மாத்திரமல்லாமல் தமிழ் மக்களுக்கு தமது சொந்த இடத்திலும் நீதிகிடைக்கமாட்டாது என்ற நிலையும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆட்சியினது ஜனநாயக விரோத, தமிழ்மக்கள் விரோத இத்தகைய நடவடிக்கைகளை ஒட்டுமொத்தமான தமிழ் மக்களும் வன்மையாகக் கண்டிப்பதை வெளிப்படுத்தும் முகமாக வருகின்ற ஒக்டோபர் 4 புதன் கிழமை மருதனார்மடம் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் நகரம்வரை மனிதச்சங்கிலி போராட்டம் ஒன்றினை நடாத்துவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி (ITAK), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) தமிழீழ விடுதலை இயக்கம் (TELO), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE), சிறீகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியவை இணைந்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கில் நாங்கள் ஒன்று திரண்டு இந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் கலந்து கொள்வதினூடாக எமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளிப்படுத்துவோம். காலை 9.00 மணிமுதல் 10.00 மணிவரை நடைபெறவுள்ள இந்த மாபெரும் போராட்டத்தில் அனைத்து மக்களையும் கலந்துகொள்ளுமாறு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சார்பாக அன்புடன் அறைகூவி அழைக்கிறோம் -என்றுள்ளது.

## நீதி -...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திபதியின் பிரகடனமாகும்.

இந்தப் பிரகடனத்தினால், நீதிமன்றத்தின் தீர்ப்புக்களையும், அதனை வழங்கும் நீதிபதிகளையும் சிறப்புரிமைகளின் பின்னால் ஒழிந்திருக்கும் உறுப்பினர்கள் கடுமையாக விமர்சிக்கின்ற போக்கு அண்மைக்காலமாக வலுத்துள்ளது.

இதன்காரணமாக, தற்போது நீதித்துறை, சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை ஆகியவற்றின் சமனிலைத்தன்மை குலைந்துள்ளது. இதனால் ஜனநாயக கட்டமைப்புக்களுக்கு இடையில் பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டு சிக்கலான நிலைமையை தோற்றுவித்துள்ளது - என்றார்.

## நீதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை என்று எவரும் சொல்லமுடியாது. தன்னுடைய கடமையினை செய்தமைக்காக அச்சுறுத்தப்பட்ட பிறகு அவர் உயிருக்கு ஆபத்து என்றும் தனக்கு பெரிய அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதாகவும் சொல்லி முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி நாட்டைவிட்டு வெளியேறியுள்ள நிலையில் நான் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வந்துள்ளேன்.

நீதித்துறை எந்தவிதமாக பாதிக்கப்பட்டுள்ளது என்பதன் வெளிப்பாடு முல்லைத்தீவு மாவட்டத்தில்தான் பெரிதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் நீதித்துறை மோசமாகப் பாதிக்கப்படுகின்றது. நீதித்துறையின் சுயாதீனம் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது என்பது எங்கள் நாட்டின் சரித்திரத்துடன் ஒன்றிய விடயம்.

புதிய விடயமல்ல ஒரு சில நீதிபதிகள் அழுத்தம் காரணமாக பதவிகளைவிட்டு நாட்டைவிட்டு வெளியேறிய தருணங்களும் கடந்த காலங்களில் நிகழ்ந்துள்ளன.

இந்த தடவைதான் முதல் தடவையாக அப்படியாக வெளியேறுகின்ற ஒருவர் வெளிப்படையாக அதனைச் சொல்லி அறிவித்துவிட்டு பதவிகளை துறந்து நாட்டை விட்டுப் போயுள்ளார்.

நீதித்துறை சுதந்திரமாக இல்லை என்பது எல்லாருக்கும் தெரிந்ததை இன்று உலகளாவிய ரீதியில் மறுக்கமுடியாத ஒரு அறிவிப்பாக இந்த செயற்பாடு அமைகின்றது.

அவருக்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது என்பது எவரும் மறுக்கமுடியாத விடயம். அவருக்கு கடந்த மாதங்களில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்ட பொழுது இந்த இடத்திலும் வேறு இடத்திலும் போராட்டங்கள் நடந்தன.

நாடாளுமன்றத்தில் நிலையியல் கட்டளையினை மீறி சரத்வீரசேகர உரையாற்றி இருக்கின்றார் என்று நான் ஒழுங்கு பிரச்சினை ஒன்றினை எழுப்பி இருந்தேன் நாடாளுமன்ற ஒழுங்குகள் பற்றிய குழுவிற்கு அது பாராப்படுத்தப்பட்டுள்ளது.

எங்களுக்கான நீதி என்பது தொடர்ச்சியாக மறுக்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றது. அதில் இருந்து நாங்கள் மீட்டெழுவதற்கான போராட்ட பயணம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

பல்வேறு வடிவங்களில் போராட்டங்கள் மாறுபட்டாலும் தொடர்ச்சியாக இந்த இனம் விடுதலையடையும் வரைக்கும் நாங்கள் போராட்டங்களை முன்னெடுப்போம் மக்கள் சார்ந்ததாக இருக்கும் மக்களின் முழுப்பங்களிப்புடன் அது நிகழும் - என்றார்.

## தம்பலகாமம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறான நிலையில், இந்த வைத்தியசாலையில் திடீர் தீ ஏற்பட்டு முக்கியமான பகுதிகள் தீக்கிரையாகியுள்ளன. அத்துடன் அதனால் சேவைகளைப் பெறுகின்ற மக்களும் இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். ஆகவே குறித்த தீ விபத்து சம்பந்தமாக முழுமையான விசாரணைகளை முன்னெடுத்து உண்மைகள் கண்றியப்படுவதுடன் அந்த வைத்தியசாலையின் சேவை வழங்கும் செயற்பாடுகள் தடைகளின்றி முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன் - என்றார்.

## முதலில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நேற்றையதினம் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது அவர் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் நீதிபதிகளையும், சட்டத்துறையையும் அச்சுறுத்தும் செயற்பாடுகளை தொடக்கி வைத்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான்.

அவர்தான் மனுவொன்றின் மீதான வழக்கு விசாரணைகள் நடத்தப்பட்ட போது, உயர் நீதிமன்ற நீதிபதிகளை பாராளுமன்றத்தின் தெரிவுக்குழுவின் முன்பாக அழைத்து விசாரணைக்கு உட்படுத்தி நபராக இருந்தார்.

அவர்தான் நாடாளுமன்ற சிறப்புரிமைகளை பயன்படுத்தி நீதித்துறையை விமர்சிக்கின்ற செயற்பாடுகளையும், அச்சுறுத்தும் நடவடிக்கைகளையும் ஆரம்பித்து வைத்து ஏனையவர்களுக்கு முன்னுதாரணமாக இருந்து வருகின்றார்.

ஆகவே, குருந்தூர்மலை விடயத்தில் தீர்ப்பளித்தமை தொடர்பில் நெருக்கடிகளுக்கு உள்ளாகி நாட்டை விட்டு வெளியேறியுள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிபதியின் விடயத்தினை விடவும், ஏற்கனவே பாராளுமன்றத்திற்கு நீதிபதிகள் அழைக்கப்பட்டமை சம்பந்தமாக ஜனாதிபதியிடம் விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும்.

ஆதன் மூலமே இந்த நாட்டின் நீதித்துறையின் சுயாதீனத்தினை உறுதிப்படுத்த முடியும். இந்த விடயத்தில் வெளிப்படையான நடவடிக்கைகள் அவசியமாகின்றன - என்றார்.

## நள்ளிரவில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒக்டேன் விலை ரூபாய் 03 அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய விலையை ரூ. 420.

மேலும், டீசல் விலையையும் செப்பெட்கோ மாற்றியமைத்துள்ளது. அதன்படி, ஓட்டோ டீசல் இப்போது ரூ. 10 ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய விலை ரூ. 351. சுப்பர் டீசலின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், மண்ணெண்ணெய் விலை ரூ.11 உயர்த்தப்பட்டுள்ளது. புதிய விலை லீற்றர் 242.

## வாழ்த்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலப்படுத்திக்கொள்ளவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விருப்பம் தெரிவித்தார்.

அதேபோல் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் முதலீட்டு துறைகளில் இருதரப்பு உறவுகளை பலப்படுத்திக்கொள்ளவது தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

மாலைதீவின் புதிய ஜனாதிபதியின் ஆட்சியில் சுபீட்சம் கிட்டும் என்ற எதிர்பார்ப்புடன், அந்நாட்டின் புதிய அரசாங்கத்துக்கும் மக்களுக்கும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வாழ்த்து தெரிவித்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நீதிபதி சரவணராஜா கண்காணிக்கப்பட்டார் என்பதை நீதி அமைச்சரே உறுதிப்படுத்தினார்

## வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயம் என இரத்தினவேல் காட்டம்

நீதிபதி சரவணராஜா பின்தொடரப்பட்டு கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்பதை நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தனது கூற்றுக்களின் ஊடாக உறுதிப்படுத்தியுள்ளார் என்று சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.இரத்தினவேல் தெரிவித்துள்ளார்.

இலங்கை வரலாற்றில் நீதிபதி ஒருவர் அழுத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டு பதவி நிலைகளை தூக்கியெறிந்து நாட்டை விட்டு வெளியேறியிருக்கின்றமையையிட்டு இந்த ஆட்சியாளர்கள் வெட்கித்தலைகுனியவேண்டும்எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதி சரவணராஜாவின் வெளியேற்றம் தொடர்பில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிரச்சுறுத்தல், அழுத்தம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியுள்ள நீதிபதி சரவணராஜாவின் வெளியேற்றம் சம்பந்தமாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஊடகங்களுக்கு சில கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அவருடைய கருத்தின் பிரகாரம், நீதிபதி வாகனத்தை விற்பனை செய்தமை, தூதுவர்களைச் சந்தித்தமை போன்ற செயற்பாடுகள் ஊடாக நீதிபதி திட்டமிட்ட வகையில் தான் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் எனக் காண்பிப்பதற்கு முயல்கின்றார்.

அத்துடன், நீதிபதிக்கு அச்சுறுத்தல் காணப்பட்டால் அது தொடர்பில் முறைப்பாடுகளை செய்யவும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் அதிகாரங்கள் இருப்பதாகவும் கூட நீதி அமைச்சர் கூறியிருக்கிறார்.

அவ்வாறான நிலையில், நீதிபதி சரவணராஜா கொழும்புக்கு வருகை தந்தமை, அவர் வாகனத்தை விற்பனை செய்தமை, தூதுவர்களை சந்தித்தமை உள்ளிட்ட விடயங்கள் சாதாரணமானவை.

நாட்டில் வாழ முடியாத ஒரு நிலைமை காணப்படுகின்றபோது, பாதுகாப்பாக நாட்டை விட்டு வெளியேறுவதற்கான முயற்சிகளை எடுக்கின்ற ஒரு சாதாரண நபர் கூட இவ்விதமான செயற்பாடுகளையே மேற்கொள்வார். இந்நிலையில், நீதிவான் நீதிமன்ற நீதிபதியாக இருந்த சரவணராஜா நிச்சயமாக அமைதியான முறையில் தனது பாதுகாப்பையும் உறுதிப்படுத்தி அச்செயற்பாடுகளை முன்னெடுப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

ஆனால், நீதியமைச்சரின் கூற்றானது மற்றொரு விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளது. அதாவது, நீதிபதி சரவணராஜா பின்தொடரப்பட்டு கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்பதே அந்த விடயமாகும்.





குருந்தூர்மலை விவகாரத்தில் முக்கியமான தீர்மானங்களை அறிவித்த அவரை, சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றுக்குள்ளும், வெளியிலும் அச்சுறுத்தினார்கள். அதனோடு, அவர் புலனாய்வாளர்களால் பின்தொடரப்பட்டும் வந்தார். அதற்கான தகவல்களும் உள்ளன.

இவ்வாறான நிலையில் நீதியமைச்சரின் கூற்று அந்த விடயங்களுக்கு மேலும் வலுச்சேர்ப்பதாகக் காணப்படுகின்றது. இவ்விதமான நிலைமையில் உள்ள ஒரு நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதும், அதியுச்சமான அழுத்தம் ஏற்படுவதும் தவிர்க்க முடியாதவொரு விடயமாகும்.

அதுமட்டுமன்றி, புலனாய்வாளர்களே அவரைப் பின்தொடர்கின்றபோது, பொலிஸாரிடம் முறைப்பாடு செய்வது, திருடனின் தாயாரிடம் திருடன் குறித்து வெற்றிலைச் சாத்திரம் கேட்பதற்கு ஒப்பானதாகும்.

ஆகவே, இலங்கை நீதித்துறையின் நீதிபதி ஒருவர் இவ்வாறு நாட்டை விட்டு வெளியேறியமைக்காக அரசாங்கம் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

மேலும், உள்நாட்டு பொறிமுறைகளால் எவ்விதமான நியாயங்களும் கிடைக்காது என்பதும் உறுதியாகிவிட்ட நிலையில் சர்வதேச ரீதியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற தமிழ் மக்களின் கோரிக்கையின் நியாயம் மீண்டும் வலுப்பெற்றுள்ளது. - என்றார். (05)

# எனது ஆரூடம் பலித்துள்ளது

## கப்ரால் சுட்டிக்காட்டு



சர்வதேச நாணய நிதியத்திடம் கையேந்தவதற்கு செல்கின்றபோது அதனுடன் செய்யப்பட்ட உடன்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய சூழல் உருவாகும். அதனால் உள்நாட்டில் பாரிய நெருக்கடிகள்ஏற்படும்என்பதை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஆரூடமாகக் கூறி யிருந்த நிலையில் தற் போது அவ்வாறான நிலைமைகளே தோற்றுவிக்கப்பட்டுள்ளன என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின் முதலாம் தவணைக் கொடுப்பனவு மீளய்வு தொடர்பில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த பீற்றர் புரூவர் தலைமையிலான கருத்துக்கள் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பொருளாதார ரீதியான சில பின்னடைவுகள் ஏற்பட்டபோது, அவற்றை முகங்கொடுத்து மேலெழுவதற்கான நடவடிக்கைகளை உள்நாட்டிலும் இதர நிதி மூலங்கள் ஊடாகவும் முன்னெடுப்பதே பொருத்தமானது என்ற நிலைப்பாட்டை நான் வெளிப்படுத்தியபோது என்னைக் கடுமையாக விமர்சித்தார்கள்.

அத்தோடுசர்வதேசநாணயநிதியத்திடம்செல்வதுதான்ஒரே தீர்வு என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி அச்செயற்பாட்டை மேற்கொண்டார்கள். தற்போது அனைத்து வழிகளும் அடைக்கப்பட்டதொரு நிலைமையே ஏற்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர் இலங்கைக்கு விஜயம்செய்துதமதுமுதலாவது மீளாய்வை நிறைவு செய்துள்ளார்கள். அந்த மீளாய்வின் இறுதியில்அவர்கள்உள்நாட்டில் வரி வருமானத்தை அதிகரித்தல், கடன்மறுசீரமைப்பை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட விடயங்களை முன்னெடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், அவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் வரையில் இரண்டாவது தவணைக்கொடுப்பனவுக்கான காலஎல்லையைக் கூறமுடியாதெனவும் சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

சர்வதேசநாணயநிதியத்தின் உடன்படிக்கைக்கு அமைவாக நடவடிக்கைகளை எடுப்பதாக இருந்தால், மின்சாரப்பட்டியல், நீர்க்கட்டணம், வரிவருமானம் உள்ளிட்ட அனைத்தையும் அதிகரிக்க வேண்டியுள்ளது.

அதேநேரம், நலத்திட்டங்களையும், அரச ஊழியர்களின் எண்ணிக்கையையும் வெகுவாகக் குறைக்க வேண்டியுள்ளது. மேலும் உள்நாட்டு கடன்மறுசீரமைப்பைச் செய்வதாக இருந்தால் ஊழியர் சேமலாப நிதியில் கைவைக்க வேண்டியுள்ளது.

அவ்வாறானசெயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றபோது உள்நாட்டில்மக்கள்சாதாரணமானதொருவாழ்க்கையைவாழ முடியாதவொரு நிலையே உருவாகும். மக்கள் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகுவார்கள். இதனால் குழப்பமானநிலைமைகளேமீண்டும் உருவெடுக்கும்.

ஆகவே, தனிமனிதனாக என்னுடைய ஆரூடத்தை அன்று நிராகரித்தவர்கள் தற்போது பொதுமக்களுக்கு பொறுப்பானபதிலளிக்கவேண்டியவர்களாகியுள்ளனர். - என்றார். (05)

# பதவி விலகிய நீதிபதியை நான் அச்சுறுத்தவில்லை

## மறுக்கிறார் சரத் வீரசேகர



முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் எனக் கூறப்படுவது பாரதூரமானது என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன் எனது நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி அவரை நான் அச்சுறுத்தவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

புகலிடக் கோரிக்கைக்காக நீதிபதி இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளாரா என்பது சந்தேகமளிப்பதாகவும் நீதிபதி முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவரது உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கலாம் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். (05)

# வெந்நீர் கொதிகலனில் தவறி வீழ்ந்தவர் சாவு

## இந்தியப் பிரஜை

வெந்நீர்கொதிகலனில்தவறிவீழ்ந்து இந்தியர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என வெலிப்பன்ன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலிப்பன்ன, மீகம பிரதேசத்தில் உள்ள தனியார் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்த 34 வயதுடைய ராஜ்பாய் என்பவரே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த நபர், மீகம தர்கா நகர்ப் பகுதியில் உள்ள தனியார் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்துகொண்டிருந்தபோதே வெந்நீர் கொதிகலனுக்குள் வீழ்ந்து, அதன் பின்னர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுகொழும்புதேசியவைத்தியசாலையில்சிகிச்சைபெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.(05)

# நீதியமைச்சர் உடனே பதவி விலகவேண்டும்

## செல்வம் எம்.பி. வலியுறுத்து



நாட்டில் நீதித்துறை நேர்மையான முறையில் செயற்படுகின்றதா என்ற கேள்வியெழுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைத்த அவர், முறையான தீர்ப்பை வழங்கிய நீதிபதி அச்சுறுத்தப்பட்டதை வண்மையாகக் கண்டிப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதித்துறை என்பது நியாயமான வகையில் செயற்பட வேண்டும் என்பதே எல்லோருடைய எதிர்பார்ப்பாக உள்ளது எனவும் ஆனால் தற்போது தமிழ் நீதிபதிகளுக்கு நியாயமாக செயற்பட முடியாத நிலையேற்பட்டுள்ளதுடன்; அவர்களை அச்சுறுத்துகின்ற செயற்பாடுகளும் நாட்டில் இடம்பெறுகின்றன என விசனம் தெரிவித்துள்ளார்.

எனவே, நீதியமைச்சர் இந்த விடயத்தை ஆராய வேண்டும் எனவும், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் இராஜினாமாவில் அழுத்தம் உயிர் அச்சுறுத்தல் இருக்குமாக இருந்தால் நீதி அமைச்சர் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும்எனவும்நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.(05)

# பதவி விலகிய முல்லை நீதிபதியை தொடர்புகொள்ள முடியவில்லை

## சாலிய பீரிஸ் தெரிவிப்பு



பதவி விலகி நாட்டை விட்டு வெளியேறியுள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவைத் தொடர்பு கொள்ள முடியவில்லை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல்மற்றும்இவ்விடயம்தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து ஆராய்ந்து வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிரச்சுறுத்தல்கள் மற்றும் மிகையான அழுத்தங்கள் காரணமாகத் தனது அனைத்துப் பதவிகளிலிருந்தும் விலகுவதாக குறிப்பிட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பதவியை துறந்து நாட்டைவிட்டும் வெளியேறியுள்ள நிலையில், அவரைத் தொடர்புகொள்ள முற்பட்டும், அது சாத்தியமாகவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன்,நீதிபதிசரவணராஜாவின் பதவி விலகல் கடிதம் மற்றும் அவர் கூறியதாகசமூகவலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் வெளியாகியுள்ள விடயங்கள் குறித்து ஆராய்ந்து வருவதாகவும்சட்டத்தரணிகள்சங்கத்தின் முன்னாள் தலைவர் சாலிய பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உலகப் பொருளாதார மந்தம் எம்மில் செலுத்தும் தாக்கம்

ஐ.நா. வர்த்தக மற்றும் அபிவிருத்தி மாநாடு ஏப்ரல் 12 அன்று வெளியிட்ட அதன் அறிக்கையில் உலகப் பொருளாதாரம் உயர்ந்த நிதிக் கொந்தளிப்புக்கு மத்தியில் மந்தமாக இருப்பதால் வளரும் நாடுகள் பல ஆண்டுகளாக சிரமத்தை எதிர்கொள்வதாக எச்சரித்திருந்தது. பல வளரும் நாடுகள் ஆழமான வளர்ச்சி நெருக்கடியை எதிர்கொள்கின்றன, ஏனெனில் உயரும் கடன் அளவுகள் மற்றும் அதிக சேவை செலவுகள் பொது மற்றும் தனியார் துறைகளில் உற்பத்தி முதலீடுகளைப் பாதிக்கின்றன என்றும் அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

சர்வதேச பணப்புழக்கத்தின் பற்றாக்குறை ஏற்கனவே சில நாடுகளில் எதிர்பாராத அதிர்ச்சிகளை ஒரு தீய நிதி சுழற்சியாக மாற்றியுள்ளது.

ஐ.நா. வர்த்தக மற்றும் அபிவிருத்தி மாநாடு அண்மையில், பல நாடுகளில் கடன் நெருக்கடி அபிவிருத்திச் சிக்கல்கள் மற்றும் அதிகரிக்கும் ஏற்றத்தாழ்வுகளால் ஏற்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. 39 நாடுகள், தாம் புதிதாகப் பெறும் கடன்களைவிட ஏற்கனவே பெற்ற கடன்களுக்காகத் திருப்பிச் செலுத்தும் தொகை அதிகமாக இருக்கின்றது என்று அது தெரிவித்துள்ளது. இது பொது முதலீடுகள் மற்றும் சமூகப் பாதுகாப்பில் பாதகமான தாக்கத்தைச் செலுத்துகின்றது.

கடந்த தசாப்தத்தில், அத்தியாவசிய சேவைகளுக்கான பொதுச் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் கடன் சேவைச் செலவுகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. இந்த காலகட்டத்தில் சுகாதார சேவையைவிட வெளி பொதுக் கடன் சேவையில் அதிகமாக செலவு செய்யும் நாடுகளின் எண்ணிக்கை 34இல் இருந்து 62 ஆக அதிகரித்துள்ளது. இந்தப் பட்டியலில் இலங்கையும் ஒன்று.

இரண்டாம் உலகப் போரின் முடிவில், மேற்கத்திய நாடுகள், காலனித்துவ சக்திகளின் நிதிக் கட்டமைப்பைப் பாதுகாக்க சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியை அமைத்தன. இந்த நிறுவனங்களின் மிகப்பெரிய பங்குதாரர்கள் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஜப்பான் அரசுகள்.

2008 முதல், ஐரோப்பிய கடன் நெருக்கடியையும், அதைத் தொடர்ந்து கொவிட்–19 பொருந்தொற்று, எரிபொருள் விலைகளின் கடுமையான அதிகரிப்பு மற்றும் வளர்ந்த பொருளாதாரங்களில் பணவீக்கம் ஆகியவற்றைக் காண்கிறோம். அதன் மோசமான விளைவுகள் வளரும் நாடுகளில் உணரப்படுகின்றன. உதாரணமாக ஐரோப்பாவுக்கான இலங்கையின் ஏற்றுமதி இந்த ஆண்டு அதிகரிக்கவில்லை.

ஜனாதிபதி விக்கிரமசிங்க 'பேர்லின் குளோபல் உரையாடலில்' குறிப்பிட்டது போல், இந்த நிலைமையால் இலங்கை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது போன்றுதான் தோன்றுகின்றது. இந்த நிலையில் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு சர்வதேச நாணய நிதியம்தான் உதவ முன்வருகின்றது. கடன்களை வழங்குகின்றது. ஆனால், தனியார் மயமாக்கல், அரசின் கட்டுப்பாடுகளை தளர்த்துதல், சமூக உதவிகளைக் குறைத்தல் போன்ற பல்வேறு நிபந்தனைகளுடன்தான் நாணய நிதியம் கடன் வழங்குகின்றது. இது அந்தந்த நாடுகளில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றது. .

இரண்டாம் உலகப் போரின் முடிவில் அமைக்கப்பட்ட இந்த இரண்டு நிறுவனங்களும் (முன்பு குறிப்பிட்டது போல் அமைக்கப்பட்டது), சீனாவின் வல்லரசு வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கக்கூடிய நவீன சிந்தனையைக் கொண்டிருக்கவில்லை என்பதும் இங்குள்ள பிரச்சினை

சர்வதேசநாணயநிதியம்மற்றும்உலகவங்கிஆகியவைமேற்குலகின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கட்டமைக்கப்பட்டவை மற்றும் அமெரிக்க மூலதனத்தைச் சார்ந்து இருப்பவை. அவற்றால் வளரும் நாடுகளின் தேவைகளைச் சமாளிக்க முடியவில்லை. ஐ.நா. மாநாடு கூட தற்போதைய சர்வதேச நிதிக் கட்டமைப்பை மறுசீரமைக்குமாறு அழைப்பு விடுத்துள்ளது.

கிழக்கு மேற்குக்கு இடையிலான இந்தப் பிரச்சினை இலங்கை போன்ற சிறிய நாடுகளைப் பெரிதும் பாதிக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை. அதனால் அழுத்தம் இல்லாத சீனாவின் அணுகுமுறைநோக்கிஅவை திசைமாறுவது மேலும் பிரச்சினைகளை வளர்க்கின்றது.

அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளுக்கு இடையேயான பூகோள அரசியல் மோதல்கள் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியை கட்டுப்படுத்துகிறது. மறுபுறம் சீனா, சர்வதேச நாணய நிதியத்தின் நல்லெண்ணத்தை நம்பியிருக்கும் இலங்கையை அதில் முழுமையாகப் பங்கேற்ற முடியாத நிலைக்குள் தள்ளுகின்றது.

இந்த வெளிச்சத்தில்தான் ஜனாதிபதி விக்கிரமசிங்க 'பேர்லின் குளோபல் உரையாடலில்' பேசுகையில், தற்போதுள்ள உலகளாவிய நிதி நிறுவனங்களும் வழிமுறைகளும் திவால் உள்ளிட்ட நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நாடுகளைச் சமாளிக்கத் தயாராக இல்லை என்றார். எனவே புதிய பொறிமுறையை அமைக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நெருக்கடிக்குள்ளாகும் சிறிய நாடுகளை முன்னிட்டும் உலகப் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வாகவும் இன்றைய முக்கியமான உலகளாவிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு மேற்கத்திய நாடுகளுக்கும் சீனா, அமெரிக்கா, சீனா மற்றும் ஐரோப்பா மற்றும் சீனாவிற்கும்இடையில்ஒருவிரிவானஉரையாடல்அவசியப்படுகின்றது.






## உக்ரேனிய போரில் திருப்புமுனை

# ஆயுத உதவியை நிறுத்தியது போலந்து யுரேனிய ஆயுதம் வழங்க ஐநா எதிர்ப்பு

ஐங்கரன் விக்கினேஸ்வரா




(போரின் திருப்புமுனையாக, போலந்து உக்ரேனுக்கு ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்துவதாக அறிவித்துள்ளதுடன், பல்வேறு நாடுகளும் உக்ரேனைக்கு ஆயுத உதவியை நிறுத்தக் கோரியுள்ளன)

உக்ரைன் நேட்டோவில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கடந்த ஆண்டு பெப்ரவரி 24 ரஷ்யா அந்நாட்டின் மீது படையெடுத்தது. ரஷ்ய துருப்புக்கள் தற்போது கிழக்கு உக்ரைனின் பெரும் பகுதியைக் கைப்பற்றியுள்ளன.

இந்தப்போரில்உக்ரைனுக்கு ஆதரவாக மேற்குலக நாடுகள் பலவும் ஆயுதங்களை வழங்கி உதவி வந்தன. அமெரிக்கா ஆயுதங்களை மட்டுமன்றி பெருமளவு நிதியையும் வழங்கியது.

இப்போது போரின் திருப்புமுனையாக, போலந்து உக்ரேனுக்கு ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்துவதாக அறிவித்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையே தானிய ஏற்றுமதி பற்றிய சர்ச்சை மோசமடைந்த நிலையில் போலந்து அவ்வாறு முடிவெடுத்துள்ளது.

அதேவேளை ரஷ்யாவை எதிர்கொள்ள உக்ரைனுக்கு யுரேனியம்செறிந்தஆயுதங்களை வழங்க வேண்டாம் என ஐநா சிறப்பு அதிகாரி ஆலிஸ் கில் மற்றைய நாடுகளை எச்சரிதுள்ளார். சர்ச்சைக்குரிய யுரேனியம் செறிவூட்டப்பட்ட பீரங்கி குண்டுகளை உக்ரைனுக்கு வழங்க வேண்டாம் என ஐ.நா., சிறப்பு அதிகாரி ஆலிஸ்கில்எட்வர்ட்ஸ்வலியுறுத்தினார். யுரேனியம்செறிவூட்டப்பட்ட பீரங்கிக் குண்டுகளை ரஷ்யாவுடனான போரில் பயன்படுத்த உக்ரைனுக்குஅனுப்பும்முடிவை மறுபரிசீலனைசெய்யுமாறு அமெரிக்க அரசுக்கு அவர் எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

### உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுக்க நேட்டோதான் காரணமா ?

அந்நிய நாடுகள் தன் அருகில் வந்து உட்கார்ந்துகொண்டு, அதன் மூலம் தங்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம், என்பதால், அதனை தடுக்க வேண்டுமென்ற முனைப்பில் ரஷ்யா படையெடுத்தது. உண்மையில்ரஷ்யாவிற்குஇருக்கக்கூடிய மிகப்பெரிய கோபம் என்னவென்றால், 1991ஆம் ஆண்டு சோவியத் யூனியன் பிளவுபட்டபோது, நேட்டோவுக்கு எதிராக ரஷ்யா அமைத்திருந்த வார்சா ஒப்பந்த நாடுகளில், பலவும் நேட்டோ படைகளில் இணைவது தான்.

இரண்டாம் உலகப் போரின் பின் 1950களில் இருந்தே நேட்டோவிற்கும், ரஷ்யாவிற்கும் தொடர்பிணக்குகள்எழுந்துள்ளன. தனது பாதுகாப்பு நேட்டோ ஒரு அச்சுறுத்தல் எனப் பார்க்கும் ரஷ்யா, அதில் கூடுதல் பலத்தைச் சேர்க்கும்

வகையில், ஐரோப்பிய கண்டத்தின் இரண்டாவது மிகப் பெரிய நாடான உக்ரைனை, நேட்டோ அமைப்பில் சேர்ப்பதை கொஞ்சம்கூட விரும்பவில்லை.

உக்ரைன் நாடு நேட்டோ அமைப்பில்எப்பொழுதும்சேர்க்கப் படாது என்ற உறுதிப்பாட்டை தங்களுக்கு வழங்க வேண்டும் என மேற்குலக நாடுகளை ரஷ்யா தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. ஆனால். அது கைகூடாததன் எதிரொலியாகத்தான், தற்பொழுது உக்ரைன் மீதான போரைத் தொடங்கியது.

சோவியத் ஒன்றியம் பிளவுபட்டது போன்ற மற்றொரு பெரும் பின்னடைவை ரஷ்யா விரும்பவில்லை. நேட்டோ அமைப்பை பலப்படுத்தி, அதன் மூலம் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் தங்கள் அதிகார எல்லை வரம்பிற்குள் வந்துவிடுவார்களோ என்ற அச்சம் ரஷ்யாவிற்கு எப்போதுமே இருந்து வருகிறது.

முக்கிய காரணம் நேட்டோ அமைப்பு, தனது பன்னாட்டுப் போர்த் தளவாடங்களை, ரஷ்யாவின் அண்டை நாடுகளான எஸ்டோனியா, லித்துவேனியா, போலாந்து ஆகியவற்றில் வைத்திருக்கிறது. மேலும், ரஷ்யாவின் வான் தாக்குதலை தடுக்கும் வகையில் ரஷ்யாவின் எல்லைப் பகுதி நாடுகள் அனைத்திலும், நேட்டோ தனது படைகளைக்

குவித்து வைத்துள்ளது. ஏற்கனவே இந்தப் படைகள் அனைத்துமே வெளியேற்றப்பட வேண்டும்எனரஷ்யாகோரிக்கை விடுத்துவரும் நிலையில், உக்ரைன், நேட்டோ அமைப்பில் இணைவதுஎன்பதுகொஞ்சம்கூட ரஷ்யா விரும்பாத ஒன்றுதான். எனவேதான்ரஷ்யாஇந்தப்போரில் தீவிரமாகக் களம் இறங்கியது.

### போலந்து ஆயுதம் வழங்காது !

தற்போது போரின் திருப்புமுனையாக, போலந்து உக்ரேனுக்கு ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்துவதாக அறிவித்துள்ளது. இருநாட்டுக்கும்இடையேதானிய ஏற்றுமதி பற்றிய சர்ச்சை மோசமடைந்த நிலையில் போலந்து அவ்வாறு முடிவெடுத்துள்ளது.

நவீனஆயுதங்களுடன்தனது ஆயுத வளத்தைப் பெருக்கிக் கொள்ளவிரும்புவதாகப்போலந்துப் பிரதமர் கூறியுள்ளார்.

இதனை எதிர்த்து, சிலநாடுகள் உக்ரேனுடன் போலியான நட்புறவைக் கொண்டுள்ளதாக ஜெலென்ஸ்கி குற்றஞ்சாட்டினார். அது நியாயமற்ற கருத்து என்று கூறியபோலந்து, போர்தொடங்கிய நாளிலிருந்து உக்ரேனுடன்

தான் துணைநின்றதை நினைவுகூர்ந்தது.

ஐக்கிய நாட்டுக் கூட்டத்தில் உக்ரேனிய அதிபர்வொலோடிமிர் ஜெலென்ஸ்கி (Volodymyr Zelenskyy) முன்வைத்த கருத்தைப் பற்றிப் பேச உக்ரேனியத் தூதருக்குப் போலந்து அழைப்பு விடுத்தது. ரஷ்யா உக்ரேன் மீது போர் தொடுத்த பிறகு வர்த்தகப் பாதைகளில் சிக்கல் ஏற்பட்டது. உக்ரேனிலிருந்து வெளியேறிய பெரிய அளவிலான தானியச் சரக்குகள் மத்திய ஐரோப்பாவைச் சென்றடைந்தன.

அது உள்நாட்டு தானிய விலையைக் குறைப்பதாகச் சில நாடுகளின் விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.அதன் விளைவாகப் போலந்து உள்ளிட்ட 5 நாடுகளில் தானிய இறக்குமதிக்கு ஐரோப்பிய ஒன்றியம் தற்காலிகத்தடை விதித்தது. இதன் விளைவேபோலந்துஉக்ரேனுக்கு ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

### உக்ரைனுக்கு ஆயுதம் வழங்காதே

ரஷ்யாவை எதிர்கொள்ள உக்ரைனுக்கு யுரேனியம் ஆயுதங்களை வழங்கக்கூடாது என அண்மையில் ஐநா சிறப்பு அதிகாரி ஆலிஸ் கில் எச்சரித்துள்ளார். சர்ச்சைக்குரிய 'யுரேனியம் செறிவூட்டப்பட்ட பீரங்கி குண்டுகளை

உக்ரைனுக்குவழங்கவேண்டாம்' என ஐ.நா., சிறப்பு அதிகாரி ஆலிஸ்ஜில்எட்வர்ட்ஸ்வலியுறுத்தினார். யுரேனியம்செறிவூட்டப்பட்ட பீரங்கி குண்டுகளை ரஷ்யாவுடனான போரில் பயன்படுத்த உக்ரைனுக்குஅனுப்பும்முடிவை மறுபரிசீலனைசெய்யுமாறு அமெரிக்க அரசுக்கு அவர் எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இதுபோன்ற ஆயுதங்களை போரில் பயன்படுத்தினால் படையினர் மட்டுமின்றி அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களும் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். போர்முடிவடைந்தபின்னரும்கூட, அந்த ஆயுதங்கள் இன்னும் பொதுமக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்துகின்றன, எனவே, குறைக்கப்பட்ட யுரேனியத்தால் செய்யப்பட்ட ஆயுதங்களை ஒரு போதும் பயன்படுத்தக்கூடாது.

உக்ரைன் மேலும் முன்னேறவும், ரஷ்ய ஆக்கிரமிப்பில் இருந்து உக்ரைனின் சில பகுதிகளை விடுவிக்கவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பல்வேறு ராணுவ உதவிகளை உக்ரைனுக்கு வழங்கி வருகின்றன.

இத்தகைய உதவிகள் மூலம் அந்த நாடுகள் நேரடியாக போரில் ஈடுபடுவதாக ரஷ்யா குற்றம்சாட்டிய போதிலும், சக்தி வாய்ந்த பீரங்கிகளில் பயன்படுத்த சர்ச்சைக்குரிய யுரேனியம் செறிவூட்டப்பட்ட குண்டுகளை அனுப்புவதாக மார்ச் மாதம் பிரிட்டன் அறிவித்தது.

(5ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

# ஆயுத உதவியை நிறுத்தியது போலந்து......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த ரஷ்யா, அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்த சர்ச்சைக்குரிய யுரேனிய எரிபொருளால் செய்யப்பட்ட விமான எதிர்ப்பு ஏவுகணையை உருவாக்கியுள்ளது.

உக்ரைனுக்கு வெடிகுண்டுகளை அனுப்பும்பிரிட்டனின்முடிவு, இருநாடுகளுக்கு இடையேயான தூதரக உறவில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் ரஷ்யா எச்சரித்துள்ளது. இந்நிலையில் கடந்த 7ஆம் நாள் உக்ரைனுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட அமெரிக்க ஆயலுறவுத்துறை அமைச்சர் அந்தோனி பிளின்கன், யுரேனியத்தால் செய்யப்பட்ட பீரங்கி குண்டுகளை உக்ரைனுக்கு வழங்க உள்ளதாக அறிவித்தார்.




இந்த ஆண்டு இறுதியில் உக்ரைனுக்கு தனது சக்திவாய்ந்த எம்-1 ஆப்ராம்ஸ் பீரங்கிகளை அனுப்ப அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அந்த ஏவுகணைகளில் பயன்படுத்த 120 மிமீ யுரேனியம் செறிவூட்டப்பட்ட குண்டுகளை உக்ரைனுக்கு வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இந்நிலையில், இதுபோன்ற ஆயுதங்களை உக்ரைனுக்கு அனுப்ப வேண்டாம் என ஐ.நா. சிறப்பு அதிகாரி ஆலிஸ் ஜில் எட்வர்ட்ஸ் வலியுறுத்துகிறார்.




**அணு குண்டுகளை உருவாக்கும் யுரேனியம்**

அணு குண்டுகளை உருவாக்க யுரேனியம் செறிவூட்டப்பட்ட பிறகு இறுதி தயாரிப்பு யுரேனியம் எரிபொருள் என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பொருள் மிகக் குறைவான கதிர்வீச்சை வெளியிடுவதாக ஐ.நாவின் கூற்றுப்படி, அணுசக்தி கண்காணிப்பு அமைப்பு கூறுகிறது.

யுரேனியம் உலோகத்தின் அதிக அடர்த்தி காரணமாக, இராணுவத் தளங்களில் கவசத் தகடுகளை உருவாக்க இதைப் பயன்படுத்தலாம். இருந்தாலும், கவச துளையிடும் குண்டுகளை உருவாக்க இது பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. இருப்பினும், கதிரியக்கப் பொருட்களைக் கொண்டு ராணுவ உபகரணங்களை தயாரிப்பதற்கு ஒரு பிரிவினர் தொடர்ந்து எதிர்ப்புதெரிவித்துவருவதும்குறிப்பிடத்தக்கது.

**உக்ரைனுக்கு ஆயுதம் வழங்க பிரான்ஸில் எதிர்ப்பு**

உக்ரைனுக்கு ஆயுதம் வழங்குவதை எதிர்த்து பிரான்ஸ் நாட்டில் பிரம்மாண்ட போராட்ட பேரணி இந்த வருட பெப்ரவரி இறுதியில் நடைபெற்றது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பியநாடுகள்உதவியுடன் உக்ரைன்பதில்தாக்குதலைமேற்கொண்டு போரில் தாக்குபிடித்து வருகிறது. போர் தொடங்கி பலகாலம் ஆகியும் முடிவுக்கு வராமல் உள்ளதால் உலக நாடுகள் கவலையில் உள்ளன.




போரில் உக்ரைனுக்கு தனது ஆதரவை உறுதியாக பிரதிபலிக்கும் விதமாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் பல தடவை உக்ரைன் நாட்டிற்கு வருகை தந்து அதிபர் ஜெலன்ஸ்கியை சந்தித்தார். போரில் உக்ரைனுக்கு உதவும் விதமாக ஆயுதங்கள் உள்ளிட்ட தளவாடங்களை அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகள் வழங்கி உதவி வருகின்றன.

தீர்வுஎட்டாத இந்தப்போரில் உக்ரைனுக்கு ஆதரவாக ஆயுதம் வழங்குவதை எதிர்த்து பிரான்ஸ் நாட்டில் போராட்டம் நடத்தப்பட்டது. பாரீஸ்நகர வீதியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு பதாகைகளை ஏந்திப் போராட்டம் நடத்தினர். பிரான்ஸ், உக்ரைன் கொடிகளை ஏந்திக்கொண்டு போரை நிறுத்துங்கள், மூன்றாம் உலகப் போர் வேண்டாம், அமைதி வேண்டும், நேட்டோவை விட்டு வெளியேறுங்கள் போன்ற கோங்களை எழுப்பினர்.

மேலும், இந்த வாசகங்களை கொண்ட பதாகைகளை தூக்கி பேரணியாக சென்றனர். அத்துடன் பலரும் போர் நிறுத்தத்திற்கு கையெழுத்து இயக்கம் நடத்தினர்.

**ஜப்பான் நாட்டிலும் எதிர்ப்பு குரல்**

அதேபோல், உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்குவதற்கு ஜப்பான் நாட்டிலும் எதிர்ப்பு குரல் உருவாகியுள்ளது. அந்நாட்டில் பிரபல பத்திரிக்கை நடத்திய கருத்துக்கணிப்பில் 76 சதவீதம் பேர் போரில் உக்ரைனுக்கு ஆயுதம் வழங்குவதை எதிர்த்து வாக்களித்துள்ளனர். 16 சதவீதம் பேர் மட்டுமே உக்ரைனுக்கு ஆயுதம் வழங்க ஆதரவு தெரிவித்துள்ளனர். அதேவேளை, போர் பாதித்த உக்ரைன் நாட்டிற்கு பொது உதவிகளை வழங்க 66 சதவீதம் பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது இந்த போரின் திருப்பு முனையாக, போலந்து உக்ரேனுக்கு ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்துவதாக அறிவித்துள்ளதுடன், பல்வேறு நாடுகளும் உக்ரேனைக்கு ஆயுத உதவியை நிறுத்தக் கோரியுள்ளன.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# தமிழர்கள் சொத்தாக குருந்தூர்மலையை பார்க்கிறோம் அங்குள்ள லிங்கமும் அதனையே உறுதிப்படுத்துகிறது

## ரவிகரன் ஆணித்தரம்

வடக்கு கிழக்கு என்பது தமிழர்களின் பூர்வீக தாயகம். தமிழர்களின் சொத்தாக குருந்தூர் மலையை நாங்கள் பார்க்கின்றோம். குருந்தூர் மலையில் வெளிப்பட்ட லிங்கமும் அதனை உறுதிப்படுத்துகின்றது என முன்னாள்வடமாகாணசபைஉறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் –

குருந்தூர் மலை விடயம் தொடர்பில் 18.01.2021 அன்று தொல்லியல் அகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அந்த அகழ்வாய்வில் லிங்கம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த லிங்கம் தொடர்பாக வரலாற்றுபேராசிரியர்சி.பத்மநாதன் குருந்தூர் மலையில் மீட்கப்பட்ட சின்னங்கள் 2300 ஆண்டுக்கு முற்பட்டவை என்பதை சின்னத்தில் உள்ள தமிழ் வரி வடிவ எழுத்துக்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன எனத் தெரிவித்தித்திருந்தார்.

குருந்தூர் மலை பேசப்படுகின்ற சின்னங்கள் பல்லவர் காலத்துக்குரியன என சிலர் கூறுகின்றனர். ஆனால் பல்லவர் காலத்துக்கும் இதற்கும் எந்த தொடர்பும் இல்லை. இவை அக்காலத்திற்கு முற்பட்டனவாகும்.

அங்கே செங்கற்களால் கட்டப்பட்ட கட்டடங்கள் தெளிவாகத் தெரிகின்றன. அவை நாகர் காலத்தோடு தொடர்புடையவை-யாகும். நாகர்கள் வழிபட்ட சிவ லிங்கங்கள் பனங்காமம், ஓமந்தை போன்ற இடங்களில் பெருமளவில் காணப்படுகின்றது. இங்கே காணப்படுவது சிவலிங்கம் எனக் கூறுவது சாலப் பொருந்தும்.

உறுதியாகக் கூறக்கூடியது என்னவென்றால் இது பழங்காலத்து லிங்க உருவம். லிங்க காலத்து ஆரம்ப வடிவமைப்பைப் பிரதிபலிக்கின்ற வடிவம். நாகர்களின் கடவுளின் பெயர் எழுதப்பட்டுள்ள வடிவம் சைவ சமய சின்னமாக அமைகின்றது என்ற கருத்தை பேராசிரியர் தெளிவாக வழங்கியுள்ளார்.

இவற்றையெல்லாம் கூற காரணம். சிங்களவர்களே ஆதி காலம் தொட்டு இருந்ததென்று பறைசாற்றிகொண்டு இருக்கும் நேரத்தில் இங்கே தமிழர்கள் தான் இருந்தார்கள் தமிழர் பூர்வீக தாயகத்திலே சைவ வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

தொல்லியல் ஆய்வாளர்கள் இதனை உறுதிபடுத்தி இருக்கும் போது தங்களுடைய கருத்துகளை திணித்து எங்களுடைய மதத்தை அழிக்கும் வேலைகளில் ஈடுபட வேண்டாம். இவ்வாறான நிலை தான் இங்கே இருக்கிறது.

உறுதியாக சைவ வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்ட குருந்தூர் மலையில் ஆதிசிவன் ஐயன் ஆலயம் ஆதிகாலம் தொட்டு இருந்து வருகிறது என்பதை இதனூடாக உறுதிப்படுத்துகின்றோம்.

காணிவிடயங்களில் 12.05.1933 அன்று 78 ஏக்கர் 2 றூட் 13 பேர்ச் காணி தொல்லியல் ஆய்வுக்காக அறிவிக்கப்பட்டுள்ளது. இது உண்மை. இதன் பின்னர் 306 ஏக்கர் காணி இவர்கள் தொடர்ச்சியாக கேட்டு வந்த நிலையில் அவ்வளவு ஏக்கர் ஏன் எனவும் 5 ஏக்கர் காணியை எடுக்குமாறு கூறியதாக ஜனாதிபதி கூறினார் என ஊடகங்களில் அறியக்கூடியதாக இருந்தது.

இந்நிலையில் 2013ஆம் ஆண்டு வர்த்தமானியில் 229 ஏக்கர் காணி இன்னும் மேலதிகமாக ஒதுக்கப்பட்டதாகவும் அது தொல்பொருள் காப்பு பகுதி எனவும் விவசாயம் அங்கே மேற்கொண்டு வரும் விவசாயிகளுக்கு வேறு இடங்களில் காணிகள் வழங்கப்படும்என்றும்கடந்த2023.09.21ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துரையாடப்பட்டதாக ஊடகங்கள் ஊடாக அறியக்கூடியதாக இருந்தது.

தெய்வ நம்பிக்கை உள்ள இடத்தைக் கொச்சைப்படுத்த முடியாது. பூர்வீக சைவ இடம் தான் என்பதை உறுதியாக குறிப்பிடுவதோடு வடக்குகிழக்குஎன்பது தமிழர்களின் பூர்வீக தாயகம். தமிழர்களின் சொத்தாக குருந்தூர் மலையை நாங்கள் பார்க்கின்றோம். குருந்தூர் மலையில் வெளிப்பட்ட லிங்கமும் அதனை உறுதிப்படுத்துகின்றது.



தற்போது ஓர் ஏக்கர் பௌத்தத் திற்காகவும், ஓர் ஏக்கர் சைவத் திற்காகவும், ஓர் ஏக்கர் பொது தேவைக்காகவும் என கடந்த 21 ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றிருக்கிறது. அதுவும் மலை அடிவாரத்தில் வேறு இடத்தில் தருவதாக கூறுவதற்கு இவர்கள் யார்? என்ற வினாவை நான் கேட்க விரும்புகின்றேன். உதாரணத்திற்கு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் இருக்கும் இடத்தில் இருந்து வேறு ஓர் இடத்திற்கு கொண்டு சென்று வழிபடுங்கள் என்று இவர்கள் கூற முடியுமா?

ஏனென்றால் இது எங்களுடைய பூர்வீக தாயக சைவ வழிபாட்டுக்குரிய இடம். குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் இருந்த இடம்தான் எங்களுடைய வழிபாட்டுக்குரிய இடமே தவிர, இவர்கள் தாங்கள் திட்டமிடுவதற்கும் வேறு இடத்தில் ஆலயம் அமைக்க கூறுவதற்குமான இடங்கள் அல்ல. பூர்வீக இடத்தில் நாங்கள் வழிபட வேண்டும்.

கடந்த 27.01.2021ஆம் ஆண்டு சூலம் உடைக்கப்பட்டுள்ளதனை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாடு மேற்கொண்டிருந்தேன். அத்தோடு 29 ஆம் திகதி சூலம் இல்லை என்பதையும் முறைப்பாடு மேற்கொண்டிருந்தேன். முல்லைத்தீவு பொலிஸார் நேரடியாக பார்த்து உறுதிப்படுத்தியும் சம்பந்தப்பட்ட யாரையும் கைது செய்யாமல் பொலிஸாரும் உடந்தையாக இருந்து எங்களுடைய வழிபாட்டு சின்னங்களை மறைப்பதற்கும், வழிபாடுகளை நிறுத்துவதற்குமான வேலைகளை தான் தொடர்ச்சியாக செய்து கொண்டு வருகிறார்கள் என மேலும் தெரிவித்தார்.

(05)

# மக்கள் எதிர்பார்க்கும் நோக்கத்தை நிறைவேற்ற சட்டம் தொடர்பான அறிவு அவர்களுக்கு தேவை

## நீதி அமைச்சர் விஜயதாஸ சுட்டிக்காட்டு

"ஜனநாயக சமூகத்தில் சட்டத்தின் ஆதிக்கத்தின் ஊடாக மக்கள் எதிர்பார்க்கும் நோக்கத்தை நிறைவேற்ற சட்டம் தொடர்பான அறிவு மக்களுக்கு அவசியம்" என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்றநிக்லாவில்இதில்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதுசட்டஉதவிஆணைக்குழுவால் குறைந்த வருமானமுடைய மக்களுக்கு இலவசமாகச் சட்ட சேவையை பெற்றுக் கொடுப்பதற்காக செயற்திறமையான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்திருக்கிறோம்.



அதற்காக ஐரோப்பிய சங்கம், ஆசிய மன்றம், யுனெஸ்கோ மற்றும் யூ.என்.டீ.பி. நிறுவனங்களின் ஒத்துழைப்பு வழங்கி இருக்கிறன.

அதேபோன்று மத்தியஸ்த சபை முறையைப் பலப்படுத்துவதற்காகவும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதற்கும் சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றிருக்கின்றன. மேலும்கடந்த காலத்தில் எமது நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடிக்கு சட்ட ஆதிக்கத்தின் வீழ்ச்சி காரணமாகும். பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு இவ்வாறான வேலைத்திட்டங்களை நடத்துவது மிகவும் அவசியமாகும்.

தேசிய சட்ட வாரத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற சேவைகள் தற்காலத்துக்கு மிகவும் உதவுகின்றன. விசேடமாக பொது மக்களுக்கு சட்டம் தொடர்பானபுரிதலைபெற்றுக்கொடுப்பதற்கு சட்டத்தரணிகள் சமூகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற இந்த சேவையை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக நீதி அமைச்சினதும் அரசாங்கத்தினதும் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம். – இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(05)

### அதிக மின் கட்டண வசூலிப்பில்

# தெற்காசியாவிலேயே இலங்கைக்கு முதலிடம் கிடைக்கும் வாய்ப்புள்ளது

## எரிசக்தி நிபுணர் சுட்டிக்காட்டு

உத்தேச மின் கட்டண அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டால் தெற்காசியாவிலேயே அதிக மின்சாரக் கட்டணம் செலுத்தும் நாடாக இலங்கை மாறும் என எரிசக்தி நிபுணரான திலக் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தற்போது தெற்காசியாவில் அதிக மின்சார கட்டணம் செலுத்தும் நாடுகளில் இலங்கை மூன்றாவது இடத்தில் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மின்சார உற்பத்திப் பொருள்களின் விலையை குறைப்பதற்கு புதிய முறையொன்று அவசரமாக அறிமுகப்படுத்தப்படவேண்டும்என எரிசக்திநிபுணர் திலக் சியம்பலாபிட்டிய வலியுறுத்தியுள்ளார். (05)



# 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறுவர்கள் போசாக்கின்மையால் கடும் பாதிப்பு

## கிளிநொச்சி மாவட்டத்தில் அதிர்ச்சித் தகவல்

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் போசக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.



ஒக்ரோபர் முதலாம் திகதி உலக சிறுவர் தினமாகும். இந்த சிறுவர் தினத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் மூவாயிரத்துக்கும் அதிகளவான சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனாட என ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது

பொருள்களின் விலை ஏற்றம், தொழில்வாய்ப்பின்மை, வறுமை, உணவு பாதுகாப்பின்மை உள்ளிட்ட காரணங்களால் குறித்த சிறுவர்கள் போசாக்கு ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதாவது 568 இற்கும் மேற்பட்ட ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களும்2765இற்குமேற்பட்ட 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களும் இவ்வாறு போசாக்கு குறைபாடுகளால்பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதாவது கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 1288 சிறுவர்களும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 884 சிறுவர்களும் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 768 சிறுவர்களும் பச்சிலைப்பள்ளிபிரதேசசெயலாளர் பிரிவில் 393 சிறுவர்களும் இவ்வாறு போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட செயலகத்தின் தகவல்கள் மூலம் அறிய முடிந்துள்ளது.

(05)

# நீதிபதியின் பதவி விலகலுக்கு அரசு பொறுப்பு கூற வேண்டும்

## ஸ்ரீகாந்தா வலியுறுத்து

*குருந்தூர் மலை விவகாரம் தொடர்பான வழக்கை முன்னெடுத்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி, தனது பதவியை இராஜினாமா செய்து நாட்டை விட்டு வெளியேறியதற்கான முழுப் பொறுப்பும் அரசாங்கத்தையே சார்ந்தது எனத் தமிழ் தேசிய கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.*

*குறித்த விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.*

*நாடாளுமன்றத்துற்குள்ளே எழுப்பப்பட்ட இனவெறிக் கூச்சல்களுக்கு அப்பால், அதிகாரத் தரப்பினால், நேரடியாகவும் மறைமுகமாகவும் நீதிபதி மீது பிரயோகிக்கப்பட்ட உளவியல் ரீதியான அழுத்தங்களே, அவரை இந்த முடிவுக்கு இட்டு சென்றதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*அத்துடன், தமது கடமையை நேர்மையுடன் செய்ய விரும்பும் சகல நீதிபதிகளுக்கும் இது ஒரு சிவப்பு எச்சரிக்கை என்பதை, அனைத்து மக்களும் புரிந்துகொள்ள வேண்டிய நிலைமைக்குள் முழு நாடும் தள்ளப்பட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.*

*குருந்தூர்மலைவிவகாரம்என்பது நீதித்துறையின் சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்டிருக்கும் பாரிய சவாலாகும், எமது ஒன்றுபட்ட எதிர்ப்பை நாம் வெளிப்படுத்த வேண்டும் என்றும் தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் ஸ்ரீணகாந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.(05)*

# அரசுக்கெதிராக அதிகரிக்கும் எதிர்ப்பை அடக்கவே சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கை

## தென்கொரியாவில் சுனில் ஹந்துநெத்தி போட்டுத் தாக்கு

அரசாங்கத்திற்கு எதிராக அதிகரிக்கும் ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்தும் நோக்கிலேயே அரசாங்கம் சமூக ஊடகங்களை கட்டுப்படுத்த முயல்கின்றது என ஜே.வி.பியின்செயற்குழுஉறுப்பினர் சுனில்ஹந்துநெத்திதெரிவித்துள்ளார்.

தென்கொரியாவில் இலங்கையர்கள் குழுவொன்றுடனான சந்திப்பின்போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் தங்கள் நடவடிக்கைகளை எதிர்க்கின்றனர் என்பதை அரசாங்கம் நன்கு அறிந்துள்ளதால் சமூக ஊடகங்களை கட்டுப்படுத்த அரசாங்கம் பல சட்டங்களை அறிவித்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள் பொதுமக்களிற்கு தகவல்களை வழங்குகின்றன அரசாங்கம்மக்களின்எதிர்பார்ப்பிற்கு ஏற்ப செயற்படுகின்றது என்றால் மோசடியில் ஈடுபடவில்லை பொதுமக்களின் பணத்தை கொள்ளையடிக்கவில்லை என்றால்அரசாங்கம் அச்சமடையதேவையில்லை என சுனில்ஹந்துநெத்திதெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி உட்பட அரசாங்கத்திற்கு மக்கள் தங்களுடன் இல்லை, மக்கள் தங்களை எதிர்க்கின்றார்கள் என்பது நன்கு தெரிந்துள்ளது. தற்போதைய ஜனாதிபதி மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவர். ஆகவே, மக்கள் தனக்கு எதிராக உள்ளனர் என்பது அவருக்கு தெரியும் எனவும் சுனில்ஹந்துநெத்திதெரிவித்துள்ளார்.

அவர்மக்களின்ஆர்ப்பாட்டங்கள் குறித்து அச்சப்படுகின்றார். மக்கள் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை சகித்துக்கொண்டால் அவர் அச்சமடையத்தேவையில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள் சமூக ஊடகங்கள் தற்போது குறிப்பிடத்தக்க விதத்தில் மாற்றமடைந்துள்ளன அரசாங்கம் கடந்த காலத்தில் இலத்திரனியல்ஊடகங்களைதனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது என தெரிவித்துள்ள ஜே.வி.பி. உறுப்பினர் ஊடகங்களை ஒடுக்க அரசாங்கம் முயற்சித்தால் அரசாங்கத்தை மக்கள் ஒடுக்கமுயலும் முதல்தடவையாக அது மாறும் எனவும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவும்சமூகஊடகங்களைக் கட்டு;ப்படுத்த முயன்றார். முகநூல், வட்ஸ்அப் போன்றவைகளை முடக்கினார்.

மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. மக்கள் அதனை ஏற்றுக்கொண்டிருந்தால் அவர் இன்னமும் ஆட்சியில் இருந்திருப்பார். இதனை நினைத்துப்பார்த்தால் ரணில் விக்கிரமசிங்க அதனைச் செய்யமாட்டார் எனவும் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார். (05)



## முல்லைத்தீவு நீதிபதி அச்சுறுத்தல் விவகாரம் ஜனாதிபதி மௌனம் குறித்து ஹர்சா கருத்து



குருந்தூர்மலைஉத்தரவிற்காக மிரட்டல்களை எதிர்கொண்டதால் நீதிபதி ரீ சரவணராஜா பதவி விலகினார் என வெளியாகும் தகவல்களால் நான் ஆழ்ந்த கவலையடைந்துள்ளேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சடிசில்வா தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்சியின் சில பிரிவினரின் மிரட்டல்கள் மனவருத்தமளிக்கின்றன இந்த விடயத்தில் ஜனாதிபதியின் மௌனம் எமது ஜனநாயகம் தொடர்பானது எனவும் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

நீதிபதிகள் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுபவர்கள் அவர்களுக்குஎதிரானஅச்சுறுத்தல்; ஜனநாயகத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றது எனவும் ருவிட்டரில் பதிவிட்டுள்ள அவர் அச்சமின்றி நீதியை வழங்குபவர்களை நாங்கள் பாதுகாக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

பக்கச்சார்பற்ற விசாரணைக்கான குரல்களுடன் எங்களையும் இணைத்துக்கொள்கிறோம். நாங்கள் ஐக்கியப்பட்டு இலங்கையின் நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்போம். இலங்கையின் அடையாளத்தைத்தழுவுவோம்எனவும்ஹர்ச டி சில்வா பதிவிட்டுள்ளார். (05)

## பொலிஸ் தடுப்பிலிருந்த நபர் கைவிலங்குடன் தப்பியோட்டம்

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்றைத் தன்னிடம் வைத்திருந்தமை தொடர்பில் சந்தேகத்தில் மித்தெனிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்பில்வைக்கப்பட்டிருந்தநபர் ஒருவர் கைவிலங்குடன் தப்பிச் சென்றுள்ளார் என மித்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பியோடியநபர்மித்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெபொக்காவ மேற்கு பிரதேசத்தில் வசிப்பவராவார்.

கடந்த 27ஆம் திகதி, பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின்அதிகாரிகள்குழுவொன்று கைக்குண்டுடன் இவரைக் கைது செய்தது.

அதன் பின்னர், நீதிமன்றில் பெறப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் சந்தேக நபர் மித்தெனிய பொலிஸ் தடுப்பில் வைக்கப்பட்டிருந்த நிலையில் தப்பிச் சென்றுள்ளார். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# மன்னாரில் 25 லட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

மன்னார் - முருங்கன் பகுதியில் சுமார் 25 லட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை கைது செய்யப் பட்டுள்ளார்.

முருங்கன் பிட்டி பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் இராணுவ புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக, நடத்தப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் பாரிய ஐஸ் போதைப்பொருள் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருடன் இணைந்து மேற்கொள்ளப் பட்ட சுற்றிவளைப்பில் 25 லட்சம் ரூபா பெறுமதியான 178.75 கிராம் நிறைக் கொண்ட ஐஸ் போதைப்பொருள் கைப் பற்றப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கடத்தலில் ஈடுபட்ட முக்கிய வியாபாரி அந்த பகுதியை விட்டு தப்பிச் சென்றுள்ளதுடன் கடத்தலை மேற்கொண்ட முருங்கன் பிட்டி பகுதியைச் சேர்ந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பி ஓடிய நபர் மற்றும் கடத்தல் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். 05)

# பிக்கு வாளால் வெட்டிக் கொலை

குருணாகல் - பொத்துஹெர, லிஹினிகிரிய, பொத்குல் விகாரையில் வசித்து வந்த பிக்கு ஒருவர் வாள்வெட்டு தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் என பொத்துஹெர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிக்குவுக்கு சொந்தமான பொத்துஹெர - பரபாவில பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வைத்து அவர் கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் கொலை செய்யப்பட்ட பிக்கு இலங்கை இராணுவத்தின் பொறியியல் பிரிவில் இருந்து ஓய்வுபெற்று கடந்த மார்ச் மாதம் துறவு வாழ்க்கைக்குள் பிரவேசித்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உயிரிழந்த தெரணம திருமணமானவர் எனவும், அவரது மனைவி சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் அவரை விட்டுச் சென்றார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்நிலையில், கொல்லப்பட்ட அன்று இரவு சிலர் தேரரைச் சந்திக்க வந்து வீட்டைக் கவனித்துக் கொண்டிருந்த தம்பதிகளை வீட்டை விட்டு வெளியேறுமாறு கூறியனர் எனப் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்நிலையில் பிக்குவின் கொலையில் அவருடன் இருந்த நபரே ஈடுபட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (05)

# தம்பலகாமம் வைத்தியசாலை தீக்கிரை ரூபாய் பல கோடி சொத்துக்கள் சேதம்

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை ஏற்பட்ட தீ பரவலால் வைத்தியசாலை உபகரணங்கள் முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்த தீ விபத்து மின் ஒழுக்கு காரணமாக இடம்பெற்றிருக்கலாம் என ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

இதில் பல தரப்பட்ட மருந்துப் பொருள்கள், ஆய்வுகூட உபகரணங்கள், பல லட்சக்கணக்கான சொத்துக்கள் தீயில் கருகி சாம்பராகின.

திருகோணமலை தீ அணைக்கும் பிரிவு மற்றும் முள்ளிப்பொத்தானை திஸ்ஸபுர இராணுவத்தினர், பொலிஸார் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

அதனையடுத்து, சம்பவ இடத்துக்கு தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி மற்றும் மாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.முரளிதரன் உள்ளிட்டோர் சென்று தீ விபத்து தொடர்பில் ஆராய்ந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (05)

# சமூகக் கட்டமைப்பு சிதைந்தமையே சீரழிவுகள் அனைத்துக்கும் காரணம்

## ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் தெரிவிப்பு

இன்றைய பல்வேறு சமூகமட்ட சீரழிவுகளிற்கும் அடிப்படை காரணம் சமூகக்கட்டமைப்பு சிதைந்துபோனமையே என ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

யாழ். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இன்று இடம்பெற்ற நூற்றாண்டு விழாவின் கல்லூரி தின விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சமூகப் பாதுகாப்பென்பது இன்றைய காலகட்டத்தில் முக்கியமானதொன்றாகும். அன்றைய காலங்களில் கிராமங்களில் ஓர் அதிபர் அல்லது ஆசிரியர் வீடுகளில் மக்கள் காலையில் கூடுவார்கள் மக்களை வழிப்படுத்துபவராக ஆசிரியர்கள் காணப்பட்டார்கள் அது தீர்க்கமான நல்ல முடிவுகளை தருகின்ற சமூகங்களை கொண்டிருந்தது. இன்று இது மாறியுள்ளது மீண்டும் இவ்வாறு வரவேண்டும் என்றால் முன்பு போல இறுக்கமான கட்டமைப்புக்கள் சமூகங்களில் உருவாக்கப்படவேண்டும்.

அதுமட்டுமல்ல பாரம்பரிய விழாக்களை கொண்டாடுவதன் மூலம் அதனை அடுத்த சந்ததிகளுக்கு ஊட்டவேண்டிய தேவை உள்ளது.

கல்வியில் எவ்வாறான சீரமைப்புக்களை ஏற்படுத்தினாலும் சிறந்த ஆசிரியரால்தான் முழுமையான மாணவனை உருவாக்கமுடியும் சமூகத்தில் சவால்களை சந்திக் ககூடிய மாணவனை உருவாக்குவது சிறந்த ஆசிரியரால்தான் முடியும். இதில் கலாசாலையின் பணி மகத்தானது. பாரம்பரிய கற்பித்தல் முறைகள் மாறி நவீன கற்பித்தல் முறை இன்று வந்துவிட்டது. இது மாணவருக்கு நன்மையாகும். ஆசிரியரும் அதற்கேற்றவாறு இசைவாக்கமடைந்தால்தான் சிறந்த சமூகத்தினை கொண்டுவர முடியும் தேர்வுமுறையிலிருந்து தன்னம்பிக்கை உடையவர்களை உருவாக்கும் சூழலில் நாம் இருக்கின்றோம். கூடுகளிற்குள் வசிக்கும் மாணவர்களாகவே இன்று அவர்கள் இருக்கிறார்கள் சமூக செயற்பாடுகளிற்கு இயலுமை கொண்டவர்கள் அல்லாமல் எமது மாணவர்கள் மாறியிருப்பது எதிர்காலத்தினை கேள்விக்குறியாக்கியுள்ளது - என்றார்.




# சரத் வீரசேகரவாலேயே நீதிபதி பதவி விலகினார்

## தம்பிராசா சாடல்

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர முல்லைத் தீவு நீதிபதியை விமர்சித்த நிலையில், அதற்கு ஜனாதிபதி, பாதுகாப்பு துறை அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களமோ நடவடிக்கை எடுக்காமையாலேயே முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா நாட்டை விட்டு வெளியேறக் காரணம் என அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் மு.தம்பிராசா தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பில் இதுவரையில் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்காமையினாலேயே இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெறுவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஐந்து வழக்குகளில் பிரதிவாதியாக உள்ளார் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவிக்கும் கருத்து உண்மைக்கு புறம்பானது எனவும் நீதிபதி சரவணராஜாவுக்கு எதிராக எந்தவித தனிப்பட்ட குற்றச்சாட்டுகளும் இல்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

குருந்தூர்மலையில் ஆதிசிவன் மலை தொடர்பான வழக்கில் நீதியை வழங்கிய நீதிபதி ஒரு தமிழர் என்பதால் அவர் அச்சுறுத்தப்பட்டார் எனவும், ஊடகங்களை சுதந்திரமாக இயங்கவிடாமல் செய்வதற்காக பயங்கரவாத சட்டத்தை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாகவும் மு.தம்பிராசா குற்றம் சுமத்தியுள்ளார். (05)

# சர்வதேச போட்டிகளிலிருந்து நிலூக்க கருணாரத்ன ஓய்வு

இலங்கையின் பூப்பந்தாட்ட வீரர் நிலூக்க கருணாரத்ன சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வுபெறவுள்ளார் என உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

தேசிய மட்டத்தில் 17 முறை சாம்பியனான நிலூக்க கருணாரத்ன, மூன்று முறை ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கை சார்பில் பங்குபற்றும் வாய்ப்பை பெற்றிருந்தார்.

தமது ஓய்வை அறிவிக்கும் வரையில் கடந்த 22 வருடங்களில் அவர் இலங்கைக்காக சர்வதேச ரீதியில் 34 வெற்றிகளை பெற்றுக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)



# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நல்லூரில் நேற்றுக் காலை போராட்டம்

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சர்வதேச சிறுவர் தினத்தில் நேற்று யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். யாழ். நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்கு அருகாமையில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலையில் இப் போராட்டம் நடைபெற்றது.

சர்வதேச சிறுவர் தினமான இன்று கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களை மீட்டுத்தர வேண்டுமென வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் யாழ். மாவட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பலநூற்றுக்கணக்கான சிறுவர்கள் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் படையினரிடம் கையளிக்கப்பட்டும் காணமல்போயுள்ளனர், அவர்களை எம்மிடமே ஒப்படைப்பதற்குச் சர்வதேசம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர். எமது பிள்ளைகளைக் காணவில்லை எனக் கடந்த பத்து வருடத்திற்கு மேலாக நாங்கள் போராடி வருகிறோம். ஆனால் இதுவரையில் இலங்கை அரசு எந்தவுத நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால் சர்வதேசம் எமக்கான நீதியை பெற்றுத்தர வேண்டும் என கடந்த 14 வருடங்களாக கோருகிறோம். எனவே இனியும் தாமதிக்காது சர்வதேசம் காத்திரமான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென மீண்டும் மீண்டும் கோரிக்கை விடுக்கின்றோம் - என்றார்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.10.2023இல் வெளியிடப்பெற்றது.